30-5

நகரத்தார் மாநில மாநாடு —

முதல் மகாநாடு. நிகழ்ச்சிகள்

1965, ஜூலை 10, 11 தேதிகளில் நடந்தேறிய

நகரத்தார்

முதல் மாநில மாநாட்டு

நிகழ்ச்சிகள்



உ

சிவமயம்

30-5

நகரத்தார்

முதல் மாநில மாநாட்டு

நிகழ்ச்சிகள்

தேதி: 1965, ஜூலை 10, 11

இடம்: ராஜா அண்ணாமலை மன்றம்

A. V. M. *அவர்களின்*

ராஜேஸ்வரி கல்யாண மண்டபம்

குறிப்பு :

நகரத்தார் முதல் மாநில மாநாடு முடிந்தவுடன், அதன் நிகழ்ச்சிகளை வெளி யிடுதல் நலம் என வரவேற்புக் குழு விரும் பியது. அப்பணி, எழுத்துத் துறையில் தொடர்புடைய காரணத்தால் எனக்குத் தரப்பெற்றது. இதனைப் பூனை பாற்கடலைக் குடிக்க முயன்ற கதையாக நான் எழுத முற்பட்டேன்.

இதில் ஏதும் சிறப்புக் காணப்பெறின் அது மாநாட்டின் பெரும் சிறப்பின் சிறு பிரிவை என் கண்கொண்டு கூறியதாகும். குறைகள் இருப்பது இயல்பு. அது என் அனுபவமின்மை, எழுத்துத் திறமை யின்மை, இவற்றைக் காட்டுவதாகும். அன்பர்கள் மன்னிப்பார்களாக.

என்னையும் பயன்படுத்திக் கொண்ட வரவேற்புக் குழுவினரின் பெருந்தன்மைக்கு என் நன்றியுரியதாகும்.

— கண. இராமநாதன்

நகரத்தார் மாநில மாநாடு

[விசுவாவசு-ஷு ஆனி-மீ 26, 27உ]

நாம் கூடநேர்ந்த சூழ்நிலை

1965 ஜூலை 10, 11-ஆம் தேதிகளில் நகரத்தார் முதல் மாநில மாநாடு ராஜா அண்ணுமலை மன்றத்திலும், ஏ.வி. எம். அவர்களின் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்திலும் நடைபெற்றது. இம்மாநாடு நகரத்தார் சமூகத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். இதற்கு முன் நகரத்தார் செட்டி நாட்டிலும், பர்மா, மலேயா, இலங்கை முதலிய வெளி நாடுகளிலும் கூடியிருக்கின்றனர். சென்னையில் கூடுவது இதுதான் முதல் முறை. இக்கூட்டத்திற்கும், இதற்கு முன் கூடிய கூட்டங்களுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

முன்னுளில் 96 ஊர் நகரத்தார் கூட்டம் என்றும், வட்டகைக் கூட்டம் என்றும், ஊர்க் கூட்டம் என்றும் கூடுவது உண்டு. அவற்றிலெல்லாம் நகரத்தார்களுக்குச் சொந்தமான பொது நிறுவனங்களை, நந்தவனங்கள், கோவில்கள், சத்திரங்களை நிர்வகிப்பதுபற்றியும் அவற்றிற்குப் பணம் சேர்ப்பது, செலவழிப்பதுபற்றியும் பேசுவது வழக்கம். அன்றியும், சில சமயங்களில் சமூகப் பழக்க வழக்கங்கள், செலவு நடைகளை முறைப்படுத்த வேண்டியதுபற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருக்கும். அதே போன்று வெளிநாடுகளில் கூடிய கூட்டங்களிலும் பொது நிறுவனங்களை நிர்வகிப்பதுபற்றியும், நடப்பு வட்டி விகிதங்கள் நிர்ணயிப்பதுபற்றியும், அவசியமானபோது அரசினரோடு முக்கியமான பேச்சுவார்த்தை நடத்துவதுபற்றியும் கூடுவது வழக்கம். ஆனால், இப்போது கூடியிருப்பது முன்னவைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட சூழ் நிலையிலாகும்.

இம் மாநாட்டில் பொதுவாகச் சமூக விஷயங்கள் பேசப்பட்டாலும், முக்கியமாகப் பொருளாதார நிலையில் சமூகத்தின் கணிசமான

பகுதி பின்தங்கி இருக்கிறது என்பதையும், அந்நிலையைப் போக்கும் வழி முறைகளைப்பற்றியுமே வெகுவாகக் கவனிக்கப்பெற்றது. இது இம் மாநாட்டின் சிறப்பாகும். முன்னர் கூடிய கூட்டங்களில் இப்படிப்பட்ட பிரச்னைகள் எழவில்லை ; அதற்கு அவசியமும் ஏற்பட வில்லை.

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு உலகச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள் நம்முடைய பொருளாதாரத்தை மிகவும் பாதித்துவிட்டன. குறிப்பாகப் பர்மாவில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள், நம்மவர்களில் மிகப் பெரும் பகுதியினரை மிகவும் பாதித்து விட்டது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பல தலைமுறையாக நமது உழைப்பையும் அறிவையும் பயன்படுத்தி அந் நாட்டையும் வளப்படுத்தி, நாமும் வள மடைந்தோம். பல நாள் பாடுபட்டுச் சேகரித்த தேனீக்களை விரட்டி விட்டுத் தேன் எடுக்கும் செய்கையை ஒப்பப் பர்மிய அரசாங்கம் நமது உழைப்பின் பயனைக் கிட்டத்தட்ட நஷ்ட ஈடு இல்லை என்ற முறையிலேயே தேசீய உடைமையாக்கி விட்டது. தேன் சேகரிப்பது தேனீக்களால்தான் முடியுமென்பதை பர்மிய அரசாங்கம் அறிந்துகொள்ளத் தவறிவிட்டது. இச்செய்கையால் நாமும் தீமை யடைகிறோம் ; பர்மாவும் நன்மை அடைய வில்லை.

இலங்கை, செய்கோன் முதலிய நாடுகளிலும் பர்மா அளவு இல்லாவிட்டாலும் பலமாதிரிச் சிரமங்கள், கட்டுப்பாடுகள் அதிகம் இருக்கின்றன, இதனாலும் நம்மவரில் பலர் பாதிக்கப் பெற்றுள்ளோம். இப்படியாகக் கடந்த சுமார் முப்பதாண்டு காலமாக நமது பொருளாதார வாழ்வில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. பர்மா முதலிய வெளிநாடுகளில் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டும், சொத்துக்களாகவும், நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்கள் நமக்குச் சொந்தமாக உள்ளன. இவை தவிர ஆங்காங்கு கோவில்கள். விடுதிகள் முதலிய பொது நிலையங்களுக்காக நம் சமூகத்தினரால் சேமிக்கப் பெற்றுள்ள தொகைகள் பல கோடி பெறும். இப்படியாகப் பொது நன்மைகளுக்காகப் பல கோடி ரூபாய்கள் தருமம் செய்த ஒரு சமூகம், இன்று தன் தேவைக்கு அல்லற்படும் நிலையிலிருப்பது மிகவும் வேதனைதருவதாகும்.

நமது சமூகம் பழம் பெருமை வாய்ந்த சமூகம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பண்பாட்டினாலும், பழக்க வழக்கங்களினாலும் உயர்ந்த நிலையில் இருந்து வந்தோம். இட்டு அறிந்ததைத் தவிர ஏற்று அறியாத மரபினர் நாம். ஏற்று அறியாதவர்களுக்கு இடுக்கண் வந்த போது ஏற்க மனமின்றித் தங்களுக்குள்ளேயே குமைந்து குமைந்து

நொந்து கொண்டிருந்தார்கள். தங்களது கஷ்டங்களை அடுத்தவருக்குச் சொல்லக் கூசிக் கூசிக் குமைந்து தங்களுக்குள்ளேயே வெந்து நொந்து வேதனைப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்தார்கள். ஊரிலே தங்கள் மூதாதையர்கள் சேர்த்து வைத்திருந்த சொத்துக்கள், தங்கம், வைரம் முதலியவற்றை வாழ்க்கைத் தேவைக்காகச் சிறுகச் சிறுக விற்றுப் பிறகு பண்ட பாத்திரங்களையும் விற்றுப் பின்னர் வீட்டையும் பிரித்து விற்கின்ற நிலை பல குடும்பங்களுக்கு வந்தது. இந்நிலையில் ஓரளவு வசதியுள்ளவர்கள் அல்லது படித்துத் தொழில் அல்லது உத்தியோகம் செய்யும் இளைஞர்கள் இதற்கு ஒரு முடிவு காண ஆசைப்பட்டனர். அவர்கள் ஆங்காங்கு கூடிக் கூடிப் பேசி வந்தனர். திருச்சி, மதுரையில் நகரத்தார் சங்கங்கள் தோன்றி அவ்வப்பகுதியில் இயன்ற சேவைகள் செய்து வந்தன.

இதே சமயத்தில் சமூகத் தலைவர்கள் பலர் நம் சமுதாயத்தின் பெரும் பகுதி நலிந்துகொண்டு வருவதைக் கண்ணுற்று, இதற்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு புறம் சிரமங்களால் வேதனையுறுபவர்கள் என்ன செய்வோமென வருந்த, மறுபுறம் சமுதாயத்தின் நலிவைப் போக்கிக் காப்பாற்றிச் சீர்படுத்த வேண்டுமே, அதற்கு என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? என்று தலைவர்கள் சிந்திக்க இரு தரப்பினரும் தங்கள் தங்கள் கரைகளில் நின்றுகொண்டு ஒருவரை நோக்க ஒருவர் ஏங்கிக் கொண்டிருந்தனர். இவ்விரு தரப்பினரும் சந்தித்துச் சமுதாய விஷயங்களை மனம்விட்டுப் பேசி உதவவும், உதவி பெறவும் ஒரு வாய்ப்பையும், சூழ்நிலையையும் ஏற்படுத்தவேண்டியிருந்தது.

சென்னை நகரிலுள்ள இளைஞர்கள் பலர் ஒன்று கூடி இங்கும் ஒரு சங்கம் அமைக்கும் பணியைப் பற்றிச் சிந்தித்தார்கள். சங்கத்துக்கு ஒரு நல்ல தலைவர் வேண்டும் என்று கருதி திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களை அணுகினார்கள். அவர்களும் ஒப்புக்கொண்டு தலைமை ஏற்றார்கள். அவர்கள் தலைமை ஏற்றவுடன் இளைஞர்களிடம் ஒரு புத்துணர்ச்சியும் தன்னம்பிக்கையும் பிறந்தது. செய்கையால், உள்ளத்தால் இளைஞராய், வயதால், அனுபவத்தால், பண்பால் முதியோராய் விளங்கிய திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களிடம் சமுதாயத் தலைவர்களுக்கு மதிப்பும் நம்பிக்கையும் பிறந்தது. அதனால் சங்கமும் பெருமதிப்புப் பெற்றது. சென்னை சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவும் அதனையொட்டி ஒரு மாநாடும் நடத்த யோசிக்கப்பட்டு வந்தது. அச்சமயத்தில் கோவை நகரத்தார் சங்கம் துவக்கப் பெற்றது. அத்துவக்க விழாவில், சென்னை, மதுரை, திருச்சிச் சங்கப் பிரதிநிதிகள் பலர் சென்று கலந்துகொண்டார்கள். அவ்விழாவில்

எல்லாச் சங்கங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து சென்னையில் கூடும் மாநாட்டைச் சென்னை மாநில மாநாடாகக் கூட்ட வேண்டுமென்றும், ஏனைய சங்கங்களின் ஒத்துழைப்புடன் சென்னை சங்கம் முன்னின்று நடத்த வேண்டுமென்றும் ஏகோபித்து முடிவு செய்யப்பெற்றது. அவ்விழாவில் சமூகத்தின் முக்கியத் தலைவர்களாகவும், சமூகத்தின் பாதுகாவலர்கள் எனவும், மும்மூர்த்திகள் எனவும் நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ளும் டாக்டர் ராஜாசர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்களும், கலைத்தந்தை கருமுத்து. தியாகராச செட்டியார் அவர்களும், தொழில் மேதை அ. மு. மு. முருகப்பச் செட்டியார் அவர்களும் கலந்துகொண்டது நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. அத்தலைவர்களும் சென்னையில் கூடவிருக்கும் மாநாட்டிற்கு ஆசி கூறித் தங்கள் ஒத்துழைப்பையும் நல்குவதாகக் கூறினர்.

முதல் மாநாடாக இருந்தபோதிலும் முழு வெற்றிபெற்ற ஒரு மாநாடாக அமைந்தது. இம்மாநாடு முன் பக்க்ங்களில் கூறியவாறு சமுதாயத்தின் இருதரப்பினரும் கலந்து பேச ஒரு வாய்ப்பாக அமைந்தது. உதவவும், உதவி பெறவும் ஏங்கும் இருகரையினரை ஒன்று சேர்க்கும் ஒரு பாலமாகவும் அமைந்தது. சுமார் முப்பது வருடங்களாக அவதியுற்று நலிந்து வந்தோருக்கு இது ஒரு விடிவெள்ளியாகும். தக்க தருணத்தில் தகுந்த சூழ்நிலையில் ஏற்ற தலைவரின் முன் முயற்சியால் நடைபெற்ற மாநாட்டின் நோக்கம் முழுமையாக, எதிர்பார்த்ததைவிடப் பெருவெற்றியாக அமைந்தது குறிப்பிடத் தக்கது. இனி, மாநாட்டு நடவடிக்கைகளைக் கவனிப்போம்.

வரவேற்புக் குழு அமைப்பு

கோயம்புத்தூர் நகரத்தார் சங்கத் துவக்க விழாவுக்குப் பிரதிநிதிகளாகச் சென்றுவந்த சென்னை சங்கத் தலைவரும் அவர்களுடன் சென்ற ஏனையோரும் திரும்பும்பொழுது பெரும் பொறுப்புடன் திரும்பினார்கள். ஒரு பெரும் சுமையைத் தாங்கி வந்திருக்கிறோம். இதை நல்லபடியாக நிறைவேற்றி வைக்கவேண்டுமே என்ற கவலையோடு திரும்பினார்கள் என்றால் மிகையாகாது.

மாநாட்டை எப்படி நடத்துவது என்பதுபற்றிச் சென்னை நகரத்தார் சங்கம் பலமுறை கூடி யோசித்தது. ஒருமுறை மதுரை, திருச்சி,கோவை சங்கங்களின் பிரதிநிதிகளோடும் கலந்து ஆலோசனை செய்தது. மாநாட்டில் ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது என்றும், மாநாட்டை ஜூலை 10, 11-ஆம் தேதிகளில் நடத்துவதென்றும்

சென்னை சங்கத்தின் தலைவரை வரவேற்புக் குழுத்தலைவராகவும் ஏனைய செயற் குழு உறுப்பினர்களை வரவேற்புக் குழு உறுப்பினர் களாகவும் கொண்டு ஒரு வரவேற்புக் குழு அமைப்பதென்று முடிவு செய்யப் பெற்றது. மதுரை, திருச்சி, கோவை சங்கங்களின் தலைவர், துணைத் தலைவர், செயலாளர்கள், பொருளாளர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள் என்றும் முடிவு செய்யப்பெற்றது.

மாநாட்டு வேலைகளைக் கவனிப்பதற்காகத் தனித் தனிக் குழுக்கள் பல அமைக்கப்பட்டன. மலர் வெளியிடுதல், விளம்பரம் சேகரித்தல், வெளியூர்ப் பிரதிநிதிகளை வரவேற்று வசதி செய்தல். மாநாட்டில் சாப்பாட்டு வசதி செய்தல், கலை நிகழ்ச்சி முதலிய பல வேலைகளுக்கும் தனித் தனிக் குழுக்கள் அமைக்கப்பெற்றன.

மாநாட்டில் பங்கு கொள்வதற்காகச் சமூகத் தலைவர்கள் பலரை அணுகியபோது யாரும் எவ்விதத் தயக்கமுமின்றி மிக்க மகிழ்ச்சி யோடு அந்தத் தேதிக்கு ஒப்புக்கொண்டனர். மாநாட்டுத் துவக்கத் தில் தேசியக் கொடி ஏற்றி வைக்கும் பொறுப்பை வயதில் முதிர்ந்த வரும், அனுபவம் மிக்கவருமான திரு. உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியார் அவர்கள் ஏற்றார்கள். மாநாட்டைத் தொழில் மேதை திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் துவக்கி வைக்கவும், டாக்டர் ராஜா ஸர். முத்தையா செட்டியார் அவர்கள் தலைமை வகிக்கவும், கலைத் தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர் கள் சிறப்பு மலரை வெளியிடவும் இசைந்தனர். அன்று மாலை நடந்த கலை நிகழ்ச்சிக்குக் கலைவளர்க்கும் திரு. ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். மேலும் சமூகத்தின் முக்கியஸ் தர்கள் பலரும் 10—7—65ல் ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்த விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்திலும், 11-ஆம் தேதி திரு. ஏ. வி. எம். அவர்களின் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நிகழ்ந்த மாநாட்டுப் பொது நடவடிக்கைகளிலும் கலந்துகொண்டு, தங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கினார்கள். மாநாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை சங்கப் பிரதிநிதி களும் நகரத்தார்கள் வசிக்கும் ஊர்ப் பிரதிநிதிகளுமாகச் சேர்ந்து ஆயிரத்திற்கும் அதிகமான பேர்கள் கலந்துகொண்டனர்.

மாநாட்டு ஆலோசனையின் நிமித்தம் சென்னை வந்த மதுரை, கோவை, திருச்சி சங்கப் பிரதிநிதிகளை மாநாடு பற்றிய செய்திகளை அறிவிப்பதற்காகவும், மாநாட்டில் கலந்துகொள்ளும்படி வேண்டுவ தற்காகவும் செட்டி நாட்டிலுள்ள எல்லா ஊர்களுக்கும் சென்றுவரு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கேற்ப செட்டிநாட்டில் உள்ள எல்லா ஊர்கட்கும் சென்று இயன்ற இடங்களில் நகரக் கூட்

டங்கள் கூட்டியும், இயலாத இடங்களில் ஆங்காங்கு உள்ள பலரைச் சந்தித்து மாநாடு பற்றிய செய்திகளை நேரில் தெரிவித்தும் வந்தார்கள். மாநாடு பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக அமைந்ததற்கும், ஏராளமான நகரத்தார்கள் கலந்து கொண்டதற்கும், இம்முயற்சி முக்கிய காரணமாக அமைந்தது.

விஷயாலோசனைக் கூட்டம்

10-7-65 சனிக்கிழமை காலை 10-45க்கு ராஜா அண்ணாமலை மன்றத்தில் விஷயாலோசனைக் கூட்டம் துவங்கியது. அண்ணாமலை மன்றத்தின் முன்னுள்ள ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் திருவுருவத்துக்கு மலர்மாலை அணிவித்து, அவர்கள் நினைவுக்கு அஞ்சலி செலுத்தி விஷயாலோசனைக் கூட்டம் துவங்கியதே மாநாட்டின் வெற்றிக்கும், நமது சமுகத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கும் ஒரு நல் அறிகுறியாகும்.

விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் சுமார் இருநூறு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சுமார் மூன்று மணி நேரம் விஷயாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. 10 தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு மாநாட்டுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஒவ்வொரு தீர்மானத்தையும் வந்திருந்த பிரதிநிதிகள் அனைவரும் கவனித்து, அதன் சாதக பாதகங்களைச் சீர் தூக்கி அவசியமான திருத்தங்கள் செய்து தீர்மானங்கட்கு ஒரு முழுமையும் அமைப்பும் கொடுத்து உருவாக்கினார்கள்.

விஷயாலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு டாக்டர். ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களை வரவேற்புக் குழுத் தலைவர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

ராஜா சர். அவர்கள் முன்னுரையாக "நகரத்தார் சங்கங்கள் பல இடங்களில் நன்கு நடைபெறுகின்றன. எல்லா ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்டு இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். எல்லோரும் நகரத்தார்கள் சார்பாகக் கலந்து கொண்டு, ஆலோசனைகள் செய்து தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றி அவற்றை நல்லபடியாகச் செயல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன். சமூக நிலைமை மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. சமூகத்தைச் சீர்படுத்தவேண்டியது, மிகவும் அவசியமானதாகவும், அவசரமானதாகவும் இருக்கிறது. முக்கியமாகக் கல்வித்

துறையிலும், தொழில் துறையிலும் நாம் அதிகக்கவனம் செலுத்த வேண்டும். அதைப்பற்றி ஆலோசிக்கவே நாம் இங்கு கூடியுள்ளோம். எல்லோரும் பொறுமையாக இருந்து, தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறி, ஏகோபித்து நல்லதொரு முடிவுக்கு வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று கூறினார்கள்.

முதல் தீர்மானம் வாசித்தவுடன் அப்படியே ஏற்றுக்கொள்ளப் பெற்றது. இரண்டாவது தீர்மானம் நகரத்தார் பொது நலக்கழகம் அமைப்பது பற்றியது. மாநாடு கூட்டப் பெற்றதின் நோக்கமே, இத்தீர்மானத்தை நல்லமுறையில் நிறைவேற்றி நன்கு செயல்படுத்த வேண்டு மென்பதற்காகத்தான். ஆகவே, எல்லோர் கவனமும் இத்தீர்மானத்தின் மீதே சென்றது. வந்திருந்த அனைவரும் அத் தீர்மானத்தை நல்ல முறையில் நல்ல அமைப்போடு நிறைவேற்ற விரும்பினார்கள். ஆகவே, அனைவரும் தீர்மானத்தின் மீது தங்கள் தங்கள் ஆலோசனைகளை விளக்கமாகத் தெரிவித்தார்கள். மூன்று மணி நேரக் கூட்டத்தில் பாதி நேரத்திற்கு மேல் இத் தீர்மானத்திற் கெனவே செலவழிக்கப் பெற்றது. எதிர்காலத்தின் ஆக்க வேலைகளுக்கு அடிகோலும் தீர்மானமாகையால் இது அதிக முக்கியத் துவம் பெற்றது. மாநாட்டில் ஏகோபித்து நிறைவேறிய இத் தீர்மானத்தை நல்ல முறையில் உருவாக்கிய பெருமை சமுதாயத் தின் முப்பெரும் தலைவர்களான, டாக்டர் ராஜா ஸர். முத்தையா செட்டியார், கலைத் தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியார், அ. மு. மு. முருகப்ப செட்டியார் ஆகியோரையே சாரும். இம் மும் மூர்த்திகளும் தீர்மானத்தை நல்ல முறையில் உருவாக்குவ தற்கு மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டார்கள். இம் மூவரும் தனித் தனியாகவும், சேர்ந்தும் பலமுறை ஆலோசனை நடத்தித் தீர் மானத்தை உருவாக்கினார்கள். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் இம்மூவரும் நின்றுகொண்டே பேசிப்பேசித் தீர்மானத்தின்ஒவ்வொரு பகுதியின் சாதகபாதகங்களைக் கவனித்து, பிரதிநிதிகளின் ஆலோசனைகளைச் சீர்தூக்கி. எல்லோருக்கும் நல்ல முறையில் பயன் தரு மாறு அமைத்துத் தந்திருக்கிறார்கள். நல்ல தீர்மானத்தின் திருத் தங்கள் இம் மூவரின் கை வண்ணத்தால் நிகழ்ந்திருக்கின்றன. இது சமுதாயத்தில் என்றென்றும் பாதுகாக்கப்படவேண்டிய ஒரு நினைவுச் சின்னமாகும். இவையெல்லாம் சமுதாயத்தின்மீது அவர்களுக்கு உள்ள பாசத்தையும் அக்கரையையுமே காட்டுகிறது. மேலும் சி. வி. சிடி. வெங்கிடாசலம் செட்டியார், திரு. ஒ. ஏ. பி. ஆர். எம். அருணாசலம் செட்டியார், திரு. சேவு. அ. அண்ணாமலை செட்டி யார் ஆகியோர் இத் தீர்மானத்தை உருவாக்குவதில் அதிகம் பங்கு எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

மற்ற தீர்மானங்கள் எல்லாம் அதிகத் திருத்தமின்றி ஏற்றுக் கொள்ளப்பெற்று மாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பெற்றன. பகல் 1-30க்கு விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் இனிது முடிந்தது.

மாநாடு

11-7-65 ஞாயிற்றுக்கிழமை சூரியோதயம் ஒரு புதுச் சோபையுடன் விளங்கியது. நகரத்தார் மாநாட்டின் நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டி ஆதவனே அரை மணி நேரம் முன்னர் எழுந்து விட்டான் போலத் தோன்றியது. எழுந்தவுடன் தன் முதற் பணியாக நகரத்தாருக்கு நல்வாழ்த்துக்களைக் கூறுவான் வேண்டி தலைவர்கள் மூவரின் இல்லத்திற்கும் சென்று அங்கிருந்து மாநாட்டுக்கு விரைந்தான்.

விரைந்து வந்த ஆதவனை மாநாட்டின் நாதசுர இசை வரவேற்று வாழ்த்திக் கொண்டிருந்தது. அன்று ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் அசல் கல்யாண மண்டபமாகவே திகழ்ந்தது. இம் மண்டபம் கட்டி ஒராண்டு ஆகிறது. மண்டபத்தின் முதல் ஆண்டு விழாவும், நகரத்தார் மாநில முதல் மாநாடும் ஒரு சேர இணைந்தது மண்டபத்திற்குப் பெருமை, மண்டபம் கட்டிய ஏ.வி. எம். அவர்களுக்குப் பெருமை ; மாநாடு நடத்திய நகரத்தார்களுக்கும் பெருமை. இம்மாதிரிப் பங்கு கொள்ளும் அனைத்தும் தாம் தாம் கொடுத்து வைத்தவர்கள் என்று பெருமை கொள்ளும் நிகழ்ச்சி அரிதினும் அரிதாகும். மிதிலையில் நடந்த சீதா கல்யாண நிகழ்ச்சி ஒன்றைத் தான் இதற்கு இணையாகச் சொல்ல முடியும்.

அதிகாலைப் பொழுதிலிருந்தே ஆதவனுடன் போட்டி போட்டுக் கொண்டு நகரத்தார் பெரு மக்கள் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்துக்கு வந்த வண்ணமிருந்தனர். வந்தவர்கள் அனைவரையும் இரு கரங் குவித்து. வாருங்கள், வாருங்கள் என்று ஆண்களும், பெண்களும் வரவேற்ற வண்ணமிருந்தனர். காலை முதல் மாநாடு துவங்கும் வரையில் நாதசுர இசை மாநாட்டை மகிழ்வித்துக்கொண்டிருந்தது.

கொடியேற்றம்

ஆதவன் அனுப்பிவைத்த நல் வாழ்த்துக்களை ஏற்றுவரும் பெருமைப் பொலிவோடு தலைவர்களும் அடுத்தடுத்து வந்து சேர்ந்தார்கள். சரியாகக் காலை 10-10 மணிக்கு திரு. சீர்காழி கோவிந்தராசன் நகரத்தார் குலத் தெய்வமான முருகப் பெருமான் மீது
















இறை வணக்கம் பாட தேசியக் கொடியைத் திரு. O. A. PR. M. அருணசலம் செட்டியாரவர்கள் ஏற்றி வைத்தார்கள். குமாரி வசந்தா கொடி வணக்கம் பாடிய பின் மாநாடு துவங்கியது.

கொடியேற்றி வைத்துப் பேசிய தன் பேச்சில் திரு. O. A. PR. M. அருணசலம் செட்டியார் அவர்கள் குறிப்பிட்டதின் சாரம்:

முன்னளில் நாம் எல்லோரும் வெளிநாடு சென்று தொழில் செய்து வந்தோம். இப்போது உள்நாட்டில் தொழில் நடத்திக் கொண்டும், படித்து உத்தியோகங்களில் இருந்துகொண்டும் வருகிருேம். ஆனல் இன்னும் நம்மில் பெரும்பாலோர் கல்வித் துறையில் பிற்போக்காகவே இருந்து வருகிருேம். பணச் செலவு செய்ய முடியாத காரணத்தால் பலர் படிக்க இயலாது இருக்கின்றனர். அவர்கட்கு நம் நகரத்தார் சங்கங்களும், நம்மில் தனித்தவர்களும் உதவி புரிந்து வருகிருர்கள். ஆனல் இது போதாது. இன்னும் அதிகமாகச் செய்வதற்கு இந்த மாநாடு ஆவன செய்யவேண்டும். செட்டி நாட்டில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் நான்குதான் உள்ளன. இன்னும் நாலைந்தாவது அவசியம். நகரத்தார்களில் பணம் படைத்த யாவரும் தங்கள் மூலதனத்தில் ஒரு பாகத்தையும், வருஷாந்தர லாபத்தில் ஒரு பகுதியையும் ஒதுக்கி வைத்து மேற்கண்ட கல்வித் தருமத்திற்குத் தாராளமாக உதவி செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். நாம் செய்யும் நற்காரியங்கள் தான் நமக்குச் சொந்தமானதாகும்.

வரவேற்புரை

அடுத்து வரவேற்புக் குழுத் தலைவர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்கள். அவ்வுரையின் சில பகுதிகள் கீழே தரப்பெற்றுள்ளன.

நம் சமூக வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்பமாக அமையும் நகரத்தார் மாநில மாநாட்டுக்கு வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக் கூறுகிறேன். சென்னை நகரத்தார் சங்கத் தலைவராக இருக்கின்ற காரணத்தால் எனக்கு இப்பேறு கிட்டியது. ஒரே குறிக்கோளுடன் நகரத்தார்களின் சங்கங்கள் நான்கு முக்கிய நகரங்களில் இயங்கிவரத் தொடங்கியிருக்கிற இந்நேரத்தில் அவை ஒன்றுக்கொன்று கலந்து செயலாற்றவும் பகிர்ந்து பணியாற்றவுமான ஒரு சூழ்நிலை ஏற்படவேண்டும் என்ற எண்ணம் அரும்பியது. எனவே இம் மாநாட்டை, இச் சங்கங்கள் நான்கும் சேர்ந்து கூட்டாகச் சென்னையில் மாநில மாநாடாக நடத்தலாம் என்ற கருத்தைக் கோவை நகரத்தார் அறிவித்தனர். அதன் பயனே இம் மாநாடு.

எனவே இம் மாநாட்டைக் கூட்டுவதற்குக் காரணமாக இருந்த எல்லோருக்கும் என் பாராட்டு உரியதாகும்.

டாக்டர் ராஜா ஸர். முத்தையா செட்டியார் அவர்கள் இம் மாநாட்டுக்குத் தலைமைதாங்க இசைந்து இங்கு வந்துள்ளமை நம் அனைவருக்கும் பெருமை தருவதாகும். நம் சமூக முன்னேற்றத்தில் பெரும் அக்கரையும், பொதுநலப் பணிகளில் இடையறுத ஈடுபாடும் உடைய அவர்கள் இங்கு தலைமைதாங்குவதற்கு உடனே இசைவு தந்தார்கள். அவர்கட்கு அண்மையில் மணிவிழா நிகழவிருப்பது நாமனைவரும் அறிந்த ஒன்று. எல்லா வகையிலும் பிறர்நலம் பேணிப் பணிபுரியும் அன்னார், பல்லாண்டு இனிது வாழவேண்டுமென்று இறைவனை இறைஞ்சி, உங்கள் சார்பிலும் என் சார்பிலும் எனது மனமுவந்த வாழ்த்துக்களை அவர்கட்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். நமது சங்கங்களின் வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் அவர்களுடைய அறிவுரையும் தலைமையும் ஒத்துழைப்பும் என்றென்றும் தேவை. எனவே, அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடையாராகிய அப்பெருமகனுரை வருக வருக என்று வரவேற்று, இம்மாநாட்டைத் தலைமைதாங்கி நடத்தித் தரும்படி பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

இம்மாநாட்டைத் தொடங்கிவைக்க உயர்திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் இசைந்து வந்துள்ளமை நம் அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். இவர்கள் உலகமே வியக்கும்படியாகப் பெரும் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள். நேரத்தைப் பொன் போல் போற்றுபவர்கள். நம் சமூக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் அளித்து ஆதரிப்பவர்கள். நம் பொதுச் சொத்துக்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, தலைமையான அற நிறுவனம் ஒன்றை ஏற்படுத்திச் செம்மையான முறையில் செயல்பட வேண்டுமென்று விரும்புபவர்கள். பார்சிகளைப்போல நம் சமூகத்தவரும் எண்ணிக்கையால் குறைவாயிருப்பினும் எல்லா வகையாலும் முன்னுக்குவர முயலுதல் வேண்டுமென்ற கருத்துடையவர்கள். மிக நீண்ட காலத்திற்கு நிலைத்துச் செயல்படும் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதிலும் எதிர்காலம்பற்றி முன் கூட்டி அறிந்து பணி புரிவதிலும் திறமை மிக்கவர்கள். நம் சமூக நலன்களைக் காக்க அன்னாருடைய ஆதரவு மிகுதியும் தேவையென்று அவர்களை மன மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் இந்தச் சிறந்த கலைப் படைப்பை வெளியிடுவதற்குக் கலைத்தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள் வந்திருப்பது பெரிதும் பொருத்தமுடைய

தென்று நான் கூற வேண்டியதில்லை. அன்னார், மதுரையிலுள்ள நகரத்தார் சங்கத்தின் தலைவராக இருந்து நம் சமூகத்திற்குப் பயன் தரும் பல நற்பணிகளை ஆற்றி வருகிறார்கள். கல்வித் துறையில் அவர்கள் ஆற்றியிருக்கும் பெருந்தொண்டு நாடறிந்ததாகும். மதுரையில் பல்கலைக் கழகம் அமைவதற்கு அடிப்படையான பலவற்றையும் செய்துதவியுள்ள பெருமை அவர்களுக்கு உரியதாகும். அவர்கட்கு நம் சமூக முன்னேற்றத்தில் பெரும் ஈடுபாடு உண்டு. அவர்களுடைய ஆக்க உதவியும் ஊக்க உரைகளும் நம் குறிக்கோள்களை நிறைவேற்ற உதவும் என்று கூறி அவர்களை மன மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

கலைத்துறையில் ஈடும் எடுப்புமின்றித் திகழும் உயர் திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் இன்று மாலையில் நிகழவிருக்கும் கலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க இருக்கிறார்கள். அவர்களுடைய அருள் நிழலிலே தான் இம்மாநாடு நடைபெறுகிறது என்றால் அது மிகையாது. அதாவது அவர்களுடைய இராஜேஸ்வரி கல்யாண மண்டபமாகிய இவ்வரங்கினை, நமது மாநாடு நடத்துவதற்காக நேற்றும் இன்றும் தந்துதவியுள்ளமையைக் குறிப்பிடுகிறேன். அவர்களின் அன்புக்கு நமது நன்றியைக் கூறி அவர்களையும் மனமுவந்து வரவேற்கிறேன்.

அழுத்தமான கொள்கையும் நிறைந்த அனுபவமும் உடையவரும், திருச்சி நகரத்தார் சங்கத் தலைவருமாகிய உயர் திரு. மு. அ. அருணாசலம் செட்டியார் அவர்கள் தம் கருத்துக்களை நம்மிடையே வழங்கி நம் சமூக முன்னேற்றத்திற்கான வழிவகைகள் கூற வந்துள்ளார்கள். அன்பின் வடிவமாகவும், அடக்கத்திற் கடையாளமாகவும் திகழும் கோவை நகரத்தார் சங்கத் தலைவர் திரு. ஏ. ஆர். எல். வி. நடராசன் செட்டியார் அவர்களும் நம்மிடையே தமது கருத்துக்களைத் தெரிவிக்க வந்துள்ளார்கள். மற்றும் நம் சமூகத்தின் சான்றோர்களும் சமயப் பெரியோர்களும் அரசியல் துறை அறிஞர்களும், கவிஞர்களும் வந்துள்ளனர்.

நமது அழைப்பைப் பெருமைப் படுத்தி நகரத்தார் ஊர்களிலிருந்தும் நகரப் பெரு மக்கள் பெருமளவில் பிரதிநிதிகளாக வந்து குழுமியுள்ளனர். இவர்கள் அனைவரையும் வருக, வருக என்று இரு கை கூப்பி வணங்கி வரவேற்கிறேன்.

நாம் கட்டி வைத்த கோயில், சத்திரங்களின் மூலம் இன்று பெரும் வருவாய் பெற வாய்ப்பிருக்கிறது. வெளி நாட்டிலும், உள் நாட்டிலும் நமது அற நிறுவனங்களில் முடங்கியுள்ள தொகை கணக்கிலடங்காததாகும். இவையனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு

பெரிய அற நிறுவனம் ஏற்படுத்தவேண்டும். செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்பர். நம் தொழிலதிபர்களும், செல்வர் களும் இதற்குப் பெரிதும் உதவ முன் வருதல் வேண்டும். நமது பெரிய தலைவர்கள் அனைவரும் கூடியுள்ள இப்பேரவையில் இத் தகைய நன் முடிவு ஒன்று எடுக்கப்பட்டு நம் சமூகம் முன்னேறு வதற்கான வழிவகைகள் முடிவு செய்யப்படுமானால் அதுவே இம் மாநாட்டின் பெரும் பயனாக அமையும்.

துவக்க உரை

மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசிய அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள், துவக்க உரையில், இன்று நகரத்தார் சமூகப் பெரு மக்களுக்கு ஒரு நல்ல நாள் என்றும், மாநாடு கூடுமிடம் ஒரு மங்களகரமான கல்யாண மண்டபம் என்றும், இதை அமைத்துத் தந்த நம் சமூகத்தைச் சேர்ந்த A. V. M. அவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும், நம் சமூகம் மேற்கொள்ளுகின்ற காரியத்துக்கு ஒரு நல்ல சகுனம் என்று குறிப்பிட்டு மேலும் பேசுகையில், ராஜா சர். தலைமை தாங்குவதும், கருமுத்து தியாகராசன் செட்டியார் சிறப்புப் பங்கு கொள்வதும் நமது இலட்சியங்கள் செவ்வனே நிறைவேறும் என்பதற்கு நல்ல அறிகுறிகள் என்றார். மேலும். நம் சமுதாயத் தின் இன்றைய நிலைபற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், வெளி நாடுகளிலிருந்து அரசியல் காரணமாகவும் தொழில் நடத்துவதற் குத் தகுதியான சூழ் நிலை இல்லாத காரணத்தாலும் இவர்களுக் குப் புது வாழ்வு அளிக்கப்படவேண்டும். அகதிகள் போன்ற நிலையில் உள்ளவர்களின் பிரச்னைகளை சர்க்கார் தங்கள் முதல் வேலையாகக் கருதவேண்டியது அவசியம். ஆனால், சமூகத்தினரான நமக்கும் அக்கரை உண்டு. அரசாங்கம் நிதானமாகப் பொதுப் படையில் காரியங்கள் செய்யும். அதனால் சில பொது நன்மைகள் ஏற்படும். ஆனால் பல குடும்பங்களின் பிரச்னைகள் பல தரப்பட்டதாயிருக்கும். இவற்றை மனிதத் தன்மையுடனும், அனுதாபத்துடனும் கவனித் தால்தான் நிவாரணம் அளிக்க முடியும். இதை முக்கியமாக நம் சங்கங்கள் ஓரளவுக்குச் செய்து வருகின்றன. அரசாங்கத்தின் ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும எதிர்பார்த்து நடைபெறவேண் டிய விஷயங்கள் பல இருக்கின்றன. அவைபற்றி ஆலோசித்து, அடிக்கடி விவாதித்து, என்ன செய்யவேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என்பது போன்ற அம்சங்களை நிர்ணயிக்கவும், சிபார்சு செய்யவும் கூட ஒரு பொது ஸ்தாபனம் அவசியப்படுகிறது என்று கூறி, மேலும் நகரத்தார் பொது நலக் கழகத்திற்கு, ராஜா ஸர். அவர்கள், தியாகராசன் செட்டியார் அவர்கள், என் போன்றவர்கள் ஒத்துழைப்பு பூரணமாக உண்டு. நாங்கள் என்ன செய்யவேண்டும்?

எங்களுடைய ஒத்தாசை எந்த அளவுக்கு வேண்டும் என்பதை நீங்கள் தெரிவித்தால், எங்களால் முடிந்த அளவுக்கு மகிழ்ச்சியுடன் செய்யத் தயாராயிருக்கிறோம் என்பதைப் பலத்த கரகோஷத்திற்கு இடையே சொல்லி முடித்தார்கள். மேலும் கஷ்டகாலத்திலும் நமது உயர் லட்சியங்களையும், பண்புகளையும் தளரவிடக்கூடாது என்பதை வலியுறுத்திவிட்டு, நம் முன் இருக்கும் விரிவான பணியைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்று நல்லாசி கூறி மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள்.

தலைமை உரை

பின்னர், மாநாட்டில் தலைமை தாங்கிய ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் பேச்சின் சுருக்கம் :

நேற்று நூற்றுக் கணக்கானவர் கூடிப் பேசினோம், இன்று ஆயிரக்கணக்கானவர் கூடியிருக்கிறோம். 96 ஊர்க் கூட்டத்தைவிட வெற்றிகரமான கூட்டம் என்று இதனைச் சொல்லலாம். இக் கூட்டம் கோவிலூரில் கூடியிருந்தால் நம்மவர்களுக்குப் பெருமைதான். ஆனால் இதுபோல் இவ்வளவு வெற்றிகரமாக இருக்குமா என்று சொல்ல முடியாது நம்மில் பலர், தொழில் உத்தியோகம் முதலிய காரணங்களால், சென்னையிலும், அது போன்ற பிற நகரங்களிலும் அதிகம் பேர் வாழ்கிறோம். அதனால் சென்னையில் கூட்டியதுதான் இவ்வளவு பெரிய வெற்றிக்குக் காரணம் என்று கருதுகிறேன். இவ்வெற்றியை நமக்குத் தேடித் தந்த சென்னை சங்கத் தலைவர் மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்கும், அவர்களுக்கு உதவியாய் இருந்த இளைஞர்க்ளுக்கும் நாம் எல்லோரும் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். இப்போது நம்முடைய கவனம் அதிகமாக கல்வி அபிவிருத்தியில் செலுத்தப்பட வேண்டும். அதுவும் தொழிற் கல்வியில் மிகுந்த அக்கரை காட்ட வேண்டும். டாக்டர், இஞ்சினியர், பாலிடெக்னிக், B.Sc., M.Sc.. போன்ற படிப்புக்களிலேயே கவனம் செலுத்தப்படல் வேண்டும். அதற்கு வாய்ப்பு இல்லாத விடத்து, தொழிலிலோ, அல்லது வியாபாரத்திலோ இறங்கவேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளின் படிப்பைப்பற்றி அடிக்கடி விசாரிக்க வேண்டும். எந்தப் படிப்பு அவசியம், முக்கியம், ஏற்றது என்று பார்த்து, அல்லது தக்காரிடம் யோசனை கேட்டு, அதற்கு ஏற்பக் குழந்தைகளின் படிப்பைக் கவனிக்க வேண்டும். அக்காலத்தில் தருமம் செய்வது என்றால், சத்திரம், கோயில் கட்டுதல்தான். ஆனால் இன்று தருமம் செய்வது அவ்வளவும் கல்வித்துறையிலேதான் இருக்கவேண்டும். ஊருக்கு ஊர் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டும். இதற்கு முன் பலர் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் நன்கு வாழ நாம் வாழ்த்த வேண்டும்.

இங்கு நாம் கூடியிருப்பது முக்கியமாக இளைஞர்களுக்காகத் தான். நமது இளைஞர்கள் மேன்மேலும், கல்வி, தொழில் வகைகளில் முன்னேறும் வாய்ப்பைத் தேடித் தருவதற்காகவே இங்கு கூடியுள்ளோம். இளைஞர்களும் இதைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேற வேண்டும். இளைஞர்கள் பயப்படாமல் வெளி மாகாணங்களிலும் வெளி நாடுகளிலும் சென்று உத்தியோகம் பார்க்க, படிக்க, தொழில் புரிய முன் வரவேண்டும். இளைஞர்களை ஊக்குவிப்பதுதான் பெரியவர்களின் வேலை.

நம் சமூகத்துக்காகத் தினம் தினம் ஐந்து நிமிஷமாவது ஒதுக்கி, அதில் சமூகத்தைப்பற்றிய சிந்தனையை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் இதைச் செய்தால் சமூகம் வெகு விரைவில் முன்னேறிவிடும். இனி வெளி நாடுகளையே எண்ணியிராமல், உள்நாட்டில் புதுப் புதுத்துறைகளில் இறங்கி முன்னேற்றம் காணவேண்டும். புதிய முன்னேற்றம் இருக்கும்போதும், பழைய பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் கெடாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

பின்னர், பொது நலக் கழக அமைப்புப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், கழக அமைப்பின் அவசியத்தினை வலியுறுத்தி, கழகத்திற்குத் தங்கள் பூரண ஒத்துழைப்பையும், உதவியையும் உறுதியளித்துவிட்டு, எல்லாம் இந்தச் சங்கமே செய்யவேண்டும் என்று இராமல் அவரவர்களின் உறவினர்களுக்கும் இயன்ற அளவு உதவ வேண்டும். இதுவும் சமூக சேவைதான் என்று தெரிவித்தார்கள்.


மலர் வெளியிடு


பின்னர் கலைத் தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள் மாநாட்டுச் சிறப்பு மலரின் அமைப்பையும், உள்ளடக்கத்தையும் பாராட்டி, நம் குல மக்களின் முயற்சி வெற்றி பெற வாழ்த்திச் சிறப்பு மலரைத் தேவகோட்டை சிவநேசச் செல்வர் சேவு. அ. மெய்யப்பச் செட்டியார் அவர்களிடம் அளித்து மலரையும், மாநாட்டையும் பெருமைப் படுத்தினார்கள்.

மலரைப் பெற்றுக்கொண்ட திரு. சேவு. அ. மெய்யப்பச் செட்டியார், சங்கம் மேற்கொண்டுள்ள பணிக்குத் தங்கள் ஒத்துழைப்பையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்.


வாழ்த்துரை

பின்னர் கோவை நகரத்தார் சங்கத்தலைவர் திரு. ஏ. ஆர். எல். வி. நடராஜன் செட்டியார் அவர்கள் தம் வாழ்த்துரையில் பொது நலக் கழகத்தின் அமைப்பு வேலை பற்றிய பல அரிய யோசனைகளைக்



















கூறி, மாநாட்டுக்கு வந்திருந்தோரையும், மாநாட்டு வேலைகளில் பங்கு கொண்டோரையும் வாழ்த்தினர்.

பின்னர் திருச்சிச் சங்கத் தலைவர் திரு. அருணசலம் செட்டியார் அவர்கள் ஏனைய பகுதிகளில் நகரங்கள் பெருகி, வளர்ந்து வரும் போது செட்டிநாடு மட்டும் வீடுகள் பிரிக்கப்பட்டு, குறுகி வரும் பரிதாப நிலையை எடுத்துக் காட்டினர்.

பின்னர் பொதுச் சொத்துக்கள் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் ஏராளமாக உள்ளன. அதனைக் கொணர்ந்து, படிப்பு, திருமணம், தங்குமிடம் இவற்றுக்குப் பயன் படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எல்லோருக்கும் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர், தமிழ்ப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமது சிறப்புரையில் ராஜா ஸர். நம் சமுதாயத்திற்குச் செய்து வரும் சேவைகளை மிகவும் பாராட்டி, அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் மூலமும், மற்றும் பல வகையாலும் அவர்கள் சமுதாயத்திற்குச் செய்து வரும் சேவைகளை எடுத்துக் காட்டி இன்னும் செய்யவிருப்பதையும் விளக்கி, அதே போன்று கருமுத்து தியாகராாசன் செட்டியார், அ. மு. மு. முருகப்பச் செட்டியார் அவர்களின் சமூக சேவைகளையும் விரிவாக எடுத்துக் காட்டி இளைஞர்களின் முன்னுள்ள பணியையும், நினைவுபடுத்தி, தமது சிறப்புரையை மாநாட்டின் முக்கியமான அம்சங்களில் ஒன்ருக்கிக் கொண்டார்.

தீர்மானங்கள்

அதற்குப் பின்னர் தீர்மானங்கள் எல்லாம் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றன. இவற்றில் சமுதாயத்திற்கு மிக முக்கியமாக விளங்கிய, பொது நலக் கழகம் அமைக்கும் 2-வது தீர்மானத்தை கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள் முன் மொழிந்தது மிகவும் பெருமைப்படத் தக்க அம்சமாகும். தீர்மானத்தை முன் மொழிந்து அவர்கள் பேசுகையில் கடந்த 25 ஆண்டுகளாக நாம் மிகவும் தாழ்வான நிலைமைக்கு வந்துவிட்ட சூழ் நிலையை விளக்கி, இப்போது மறு வாழ்வுக்குத் திட்டமிட்டுள்ளதை வரவேற்ருர்கள். மேலும் நமது பொதுப் பணங்கள் உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் உள்ள பொது நிதிகள் எவ்வளவு? எந்த வகையில்? எங்கெங்கு உள்ளது என்பதைக் கணக்கெடுத்துப் பயன்படுத்தினல், நாம் இப்போது நினைக்கின்ற எல்லா நன்மைகளையும் செய்து விடலாம் என்று கூறி, நம் குலத்தில் மணமாகாத பெண்கள், பண

2

வசதி இல்லாத காரணத்தால், கன்னிப் பெண்களாகவே, 30 வயதையும் கடந்து விட்ட பலர் இருப்பதை மிக்க வேதனையோடு எடுத்துக் காட்டினார்கள். மேலும் கல்வித் துறையின் முக்கியத்துவம் பற்றிப் பேசுகையில், இன்று பொருட் செல்வத்தை விடக் கல்விச் செல்வமே பெரும் சொத்து என்று கூறி, கல்விக்கும் திருமணத்திற்கும் உதவ வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி, பணம் படைத்த எல்லோரும் இக்கழகப் பொது நிதிக்குத் தாராளமாக உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, யானை தான் வாங்கும் கவளத்தில் ஒரு சிறிது தவறினால் அதற்குக் குறையொன்றும் இல்லை என்பதையும், ஆனால் ஊர்ந்து திரிகின்ற பல கோடி எறும்புகளுக்குப் பயன்படுகின்றன என்ற உதாரணத்தையும் எடுத்துக் காட்டினார்கள்.

பின்னர், உலகிலே தனிப்பட்டவர் பல்கலைக் கழகம் கண்டது ராஜா சர். தான் என்றும், அதனால் நம்மவர் பெறும் உதவியையும், காரைக்குடி அழகப்பா கல்லூரியால் செட்டிநாடு பெற்றுள்ள பேற்றையும் எடுத்துச் சொல்லி, தனக்கு அதிகமாகப் பேசிப் பழக்கமில்லை என்றும், அடக்கமாகச் சொல்லித் தமது பல நாள் சிந்தனையின் சாரத்தைச் சில வரிகளில் வடித்துத் தந்து பேச்சைவிடச் செயல் முக்கியம் என்பதை நினைவு படுத்தினார்கள்.

தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய திரு. சி. வி. சி. டி. வி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள், தான் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும், இக் கழகம் துவங்கினால்தான் நம் சமூகம் நன்மை அடையும், எல்லோரும் அவரவர் சக்திக்குத் தக்கபடி உதவ வேண்டும், எல்லோரின் பங்கும் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

தான் தீர்மானத்தை இப்போது ஆமோதித்து நிறைவேற்றி விட்டுச் செல்வதால், எந்தப் பயனும் ஏற்பட்டு விடாது என்றும், தீர்மானத்தைச் செயல்படுத்துவதுதான் மிக முக்கியமானதும், சிரமமானதுமாகும் என்று கூறிச் செயல் படுத்துவதை இப்பொழுது துவங்கிவிட வேண்டும் என்றார்கள்.

இக் கழகம் நிறுவுதலின் முக்கிய வேலை ஒன்று, பணம் சேர்ப்பது, இரண்டு, சேர்த்த பணத்தை முறையாகச் செலவழிப்பது. ஆகவே கழகத்தின் முதல் வேலை பணம் சேர்ப்பது. கழகத்திற்குக் கோடிக் கணக்கான ரூபாய்கள் தேவைப்படலாம். ஆண்டு ஒன்றுக்கு 5 முதல் 10 லட்சம் ரூபாய் வரை செலவு செய்ய வேண்டி வரும். ஆகவே, உடனடியாக இப்போதே பணம் சேர்ப்பதில் இறங்கினால் தான், அதுவும் எல்லாப் பிரமுகர்களும், குறிப்பாக மூன்று லட்சுமி

புத்திரர்களும் (ராஜாசர் முத்தையா செட்டியார், கருமுத்து தியாக ராசன் செட்டியார், அ. மு. மு. முருகப்ப செட்டியார்) சேர்ந்திருக்கும் இப்போது துவங்கினுல்தான் நாம் வெற்றிப் பாதையில் காலடி வைத்திருக்கிறோம் என்று பொருள். எனவே, இரண்டு லட்சம் ரூபாய் உடனடியாகச் சேர்க்க வேண்டுமென்றும், அதற்கு எல்லோரும் உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

உடனடியாக ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் முதல் தவணையாக ரூபாய் 25,000/, கரு முத்து தியாகராஜன் செட்டியார் அவர்கள் ரூ. 25,000/- அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் ரூ. 20,000/-, தர முன்வந்தார்கள். ஏனைய பலரும் தொடர்ந்து மாநாட்டிலேயே பெருவாரியான தொகை வாக்களித்தார்கள். அவர்களின் விவரம் பிறிதொரு பக்கத்தில் தரப் பெற்றுள்ளது. இப்படியாக மாநாட்டின் முக்கியத் தீர்மானமான பொது நலக் கழக அமைப்பு, தீர்மானமாக மட்டுமின்றி காரியத்திலேயே நிறைவேறத் தொடங்கி விட்டது.

தீர்மானங்களுக்கிடையே பேசிய திரு. பவ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்கள், இன்றைய நமது சமுதாய இளைஞர்களிடை நிலவ வேண்டிய பண்பாட்டினை விளக்கி, நாணயம் என்பது நமது மரபினர்க்கே உரிய ஒரு சிறந்த குணமாகும். அதனைக் காப்பாற்றி வளர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சமூகப் பணிக்குத் தன் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருவதாகக் கூறி எல்லோரையும் ஒத்துழைக்குமாறு வேண்டினுர்கள்.

தொடர்ந்து ஏனைய பல தீர்மானங்களும் ஏக மனதாக நிறைவேறின. கடைசித் தீர்மானமான, ராஜாசர். அவர்களின் 60-ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அவர்கட்கு வாழ்த்துத் தெரிவிக்கும் தீர்மானம், பிரேரேபிக்கப்பட்டவுடன், கூடியிருந்த அனைவராலும் ஒரே குரலில் ஆமோதிக்கப்பட்டு, மிகவும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நிறைவேறியது. தீர்மானங்களின் முழு விபரம் பிறிதொரு பக்கத்தில் தரப் பெற்றுள்ளது.

பின்னர் வரவேற்பாளர்கள் மதிய உணவை நினைவு படுத்திய பின் மதிய உணவுக்குச் சென்றுர்கள். மாநாட்டுக்கு வந்திருந்த பிரமுகர்கள் உட்பட அத்தனை பேரும் அங்கேயே உணவு கொண்டு, பிற்பகல் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். அன்றையப் பகல் உணவின் சிறப்பையும், தரத்தையும் போற்றிப் புகழாதார் யாரு இல்லையென்றுல் அது மிகையல்ல.

பிற்பகல் நிகழ்ச்சி குமாரி. கரு. வசந்தாவின் இன்னிசையோடு ஆரம்பமாகியது. பல அறிஞர்கள், பிரதிநிதிகள் சொற்பொழிவாற்

றிஞர்கள். யாவரும், மாநாட்டின் முக்கியத்துவத்தையும், அதன் எதிர்கால வேலையின் அவசியத்தையும் அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோரியே பேசினார்கள். ஆகவே ஒரே கருத்துக்கள் பலருடைய பேச்சுக்களில் இருப்பது இயல்பு, ஆகவே எல்லோரின் பேச்சுக்களிலும் பிரதி நிதித்துவம் வகிக்கின்ற குறிப்பிட்ட செய்திகளை மட்டும் சொல்லிப் பங்கு கொண்ட எல்லோர் பெயர்களையும் கீழே தந்துள்ளோம்.

முதலில் பேசிய டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் நம்முடைய சமூகம் ஒரு பொருள்மை யற்ற சமூகம் என்றும், எல்லோரும் நன்கு வாழ வேண்டும் என்று கருதுகின்ற சமூகம் என்றும் தெரிவித்து, எல்லோரும் இலாபத்தில் ஐந்து சதவீதம் இப்பொதுப் பணிக்குக் கொடுக்கலாமென்றும் தெரிவித்து, நாம் எல்லோருக்கும் அறம் பல செய்துள்ளோம். இனி சுமார் 10 ஆண்டுகளுக்காவது அவ்வறப் பணியை நம்மவர் பக்கம் திருப்பினால் நலம் என்று தெரிவித்துக் கொண்டார்.

திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியார் பேசுகையில் கடந்த ஆறு மாத காலமாகப் பெரு முயற்சி செய்து, மிகவும் பொறுப்பாக இருந்து, திரு. மு. சோம சுந்தரம் செட்டியார் அவர்கள் இம் மாநாட்டைக் கூட்டியுள்ளார்கள். இந்த எண்ணம் எல்லோருக்கும் இருந்தது என்றாலும், அதை ஒழுங்குபடுத்திச் செயலாற்ற வல்லமை வாய்ந்த தலைவராகத் திரு. சோம. விளங்கினார்கள். அதனால் இம் மாநாடு வெற்றிகரமாக விளங்குகிறது. அவர்கட்குத் தனது வாழ்த்தைத் தெரிவித்து மேலும் பேசுகையில், நமது சமூகத்தின் தலைவர்கள், சமூகத்தினருக்கு உதவ வேண்டுமென்ற நன்னோக்கத்தோடும் ஆர்வத்தோடும் இருக்கிறார்கள். இளைஞர்கள் நன்கு பாடு பட்டு, உதவிகளைப் பயன்படுத்தி, முன்னேறித் தங்களைத் தக்கவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திரு. தமிழண்ணல் பேசுகையில், எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அந்தந்தத் துறைகளில் முன் மாதிரியாக விளங்க வேண்டுமென்று நம் இளைஞர்களைக் கேட்டுக் கொண்டார்.

கோலாலம்பூர் பிரதிநிதியாகப் பேசிய 'தமிழ் நேசன்' ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் பேசுகையில், 10 ஆண்டுகளுக்குப் பிறகு நான் வந்து தமிழ் நாட்டையும், சமூகத்தையும் பார்க்கும் போது அதன் முன்னேற்றம் கண்டு மிகவும் மகிழ்ச்சி யுறுவதாகக் கூறினார். மேலும் பேசுகையில் இங்கு செய்கிற எல்லா முன்னேற்றத் திட்டங்களுக்கும், ஏற்பாடுகளுக்கும், வெளிநாடுகளில்

உள்ளவர்கள் தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்வார்கள் என்று உறுதி கூறினர்.

திரு. M. V. அருணாசலம் அவர்கள் பேசுகையில், இன்று நமது தாழ்வு என்பது பணத்தில் மட்டுமே தவிர பண்பில் அல்ல. பண்பில் தாழ்ந்தால்தான் உண்மையில் தாழ்வாகும். ஆற்றலும் அறிவும் இருப்பின் நம்மை யாரும் தாழ்த்திவிட முடியாது. நமது தாழ்வு என்பது தற்காலிகமானது தானே தவிர வேறல்ல. தீர்மானங்களைச் செய்வதோடு நின்று விடாமல், நமது பங்கையாவது உடனடியாகச் செயலாக்கவேண்டும். நாம் மீண்டும் முன்னேறி விடுவோம் என்பது உறுதி என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

மாலை நிகழ்ச்சியில் கடைசியாக, மீண்டும் பேசிய சி, வி. சிடி. வி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் இளைஞர்கட்குத் தன்னையே ஒரு முன் மாதிரியாகக் காட்டி, தான் இரண்டாவது பாரம் அரைப் பரீட்சை வரைதான் படித்ததாகவும் பின்னர் தானே முயன்று, தமிழ் மூலம் ஆங்கிலம் படித்து இன்றைய நிலைக்கு முன்னேறியதாகவும், ஆகவே முயற்சி திருவினையாக்கும் என்ற கருத்தை மனதில் கொண்டு அடுத்தடுத்து முயன்றால் நம் இளைஞர்களுக்கு வெற்றி நிச்சயம் என்றார். மேலும் பேசுகையில், இப் பெரும் மாநாட்டையும், அதில் பெரும் தலைவர்கள் உட்பட ஏனைய பிரமுகர்களையும், மக்களையும் ஒன்று திரட்டி, இம் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித் தந்த திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார்கள்.

பிரதி நிதிகளின் பேச்சுக்களிடையே, மாநாட்டுக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் செயலாளர் திரு. கும. முருகப்பன் அவர்களாலும், பொருளாளர் திரு. பிச. பழ. மெய்யப்ப செட்டியார் அவர்களாலும் படிக்கப் பெற்றன.

மாலை நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்கள் கீழ் வருமாறு :

1. டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்கள்
2. திரு. ஆவி. க. தியாகராசன் செட்டியாரவர்கள்
3, டாக்டர் மெ. சுந்தரம், M. A., M. Litt., Ph. D.,
4. திரு. ச. சிங்காரம் செட்டியாரவர்கள்
5. ,, ஏ. வி. மெய்யப்ப செட்டியாரவர்கள்
6. ,, சுப. சிவராமன் செட்டியாரவர்கள்
7. ,, நாக. நாகப்ப செட்டியாரவர்கள்
8. ,, தமிழண்ணல் ராம. பெரிய கருப்பன் M. A.
9. ,, முருகு. சுப்பிரமணியம் அவர்கள்

10. ,, AL. சீனிவாசன் செட்டியாரவர்கள்
11. ,, கவிஞர் கண்ணதாசன் அவர்கள்
12. ,, சுப. அண்ணுமலை M. A., M. Litt
13. ,, M. V. அருணுசலம் அவர்கள்
14. ,, R. ரத்தினம் அவர்கள்
15. ,, S. V. N. நாகப்பன் அவர்கள்
16. ,, சுப. அருணுசலம் அவர்கள்
17. ,, ஆவி. க. ஆவிச்சி செட்டியாரவர்கள்
18. ,, ப. அ. கருப்பன் செட்டியாரவர்கள்
19. ,, செ. செல்லப்ப செட்டியாரவர்கள்
20. ,, தமிழ்வாணன் அவர்கள்
21. ,, M. V. M. ராமனுதன் செட்டியாரவர்கள்
22. ,, C. V. CT. வெங்கடாசலம் செட்டியாரவர்கள்

மாநாட்டு வேலைகள் கிட்டத்தட்ட முடிந்து, செயலாளர் நன்றி கூறுமுன் வரவேற்புக் குழுத் தலைவர் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கட்கும், பிரமுகர்கட்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில், நாம் எதிர்பார்த்ததைவிட வெற்றிகரமாக மாநாடு முடிந்துள்ள சிறப்பினை எடுத்துக் கூறித் தன் தோள்மீது மீண்டுமொரு பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி ''கோவை சென்று வந்த போது மாநாடு நடத்தும் பொறுப்புக் கிடைத்தது. இம் மாநாடு பொது நலக் கழகம் அமைக்கும் பொறுப்பைக் கொடுத்துள்ளது. இது மிகப் பெரும் பொறுப்பு. இதில் அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை. ஆகவே ஆர்வமுள்ள யாவரும் அங்கத்தினராகி, சுறு சுறுப்பாக வேலை செய்து, வரும் ஆவணி மாதத்திற்குள் இக் கழகத்தைப் பதிவு செய்து விட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர், செயலாளர் திரு. அ. மு. லெட்சுமணன் அவர்களும் நன்றி கூறியபின் நாட்டு வாழ்த்துடன் மாநாடு முடிவுற்றுக் கலை நிகழ்ச்சி துவங்கியது.

கலை நிகழ்ச்சி

அன்று மாலை ஏற்பாடு செய்திருந்த கலை நிகழ்ச்சியில் குமாரி எஸ். ஜெயா & குமாரி பிரபா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடை பெற்றது. அந் நிகழ்ச்சிக்குக் கலை வளர்க்கும் திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கி, நகரத்தார் பெரு மக்களுக்கு வாழ்த்துக் கூறி, நகரத்தார் சங்கத்திற்கும் நாட்டியக் குழுவினர்க்கும் தன் ஆசியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்னர் சமூகத் தலைவர்களும், பிற பிரமுகர்களும் இரவு 9 மணிக்கு மேல் பிரியா விடைபெற்று மெது மெதுவாகச் சென்றனர். அன்றைய நிகழ்ச்சிகளும் பேச்சுக்களும் எல்லோர் உள்ளங்களிலும் அலை மோதிக் கொண்டிருக்கத் திரும்பத் திரும்ப அந் நிகழ்ச்சிகளையும் பேச்சுக்களையும் விவாதித்துக் கொண்டு மாநாட்டு இடத்தை விட்டுச் செல்ல மனமின்றி இரவு 11, 12 மணி வரையிலும் கும்பல் கும்பலாக மக்கள் குழுமி யிருந்தன ரென்றால், மாநாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்ல வேறு என்ன இருக்கிறது?

மாநாட்டு மலர்

மாநாட்டின் பல சிறப்புக்களில் மலர் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சுமார் 350 பக்கங்களுக்கு மேல் உள்ள மலர் ஒரு சிறந்த கலைப் படைப்பு என்று சொன்னால் அது மிகையல்ல. ஒன்பது நகரக் கோயில்களின் வரலாறும், படங்களும், நகரத்தார் சங்கங்களின் வரலாறுகளும் மிக முக்கியமான அம்சமாகும். மேலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும், இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகளும், சமுதாய, பண்பாட்டுக் கட்டுரைகளும், தொழில் வளர்ச்சி பற்றிய கட்டுரைகளும், "Chettinad - The land and its people" என்ற ஆங்கிலக் கட்டுரையும், நகரத்தார் பழக்க வழக்கங்கள் பற்றிய சுவையான குறிப்புக்களும் அடங்கியுள்ளன. இது ஒவ்வொரு நகரத்தார் குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டிய ஒரு நூலாக அமைந்து விட்டது. இம் மலரைத் தயாரித்த 'சோமலெ'. அவர்கட்கும் உதவியாக இருந்த தமிழண்ணல் அவர்கட்கும், அமைப்பாளராக இருந்து ஓடியாடிச் சுழன்று மலரைச் சிறப்பாகக் கொணர்ந்த அ. தியாகராசன் அவர்கட்கும், அவர்கட்கு உதவியாக இருந்த ஏனையோருக்கும் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் தகும். மலருக்கு மதுரை, திருச்சி, கோவை சங்கங்கள் விளம்பரங்கள் சேகரித்து அனுப்பின. அச் சங்க நிர்வாகிகள் மிகவும் பாராட்டுக்கு உரியவர்களாவார்கள். சங்கம் நன்கு நடைபெறுவதற்குப் பணம் சேகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ள சங்கத்தின் பொருளாளர்களான திரு. அ. கணபதி செட்டியார் அவர்களும், திரு P. S. PL. மெய்யப்ப செட்டியார் அவர்களும் இந்த மலருக்குப் பணம் சேர்ப்பதிலும் அதிக சிரத்தை காட்டினார்கள். அதாவது மலருக்கு விளம்பரம் சேர்ப்பதில் அதிக அக்கரை காட்டி விளம்பர வருவாயின் பெரும் பகுதியைத் தேடித் தந்தார்கள். மாநாட்டின் நடைமுறை முழுதும் விளம்பர வருவாயில் நடைபெற்றுள்ளது. எனவே மாநாட்டு வெற்றிக்கு மூல பலமாக அமைந்த பொருளாளர்களின் சேவையின் மதிப்பை என்னவென்று கூறுவது? அவர்களுக்கு நன்றி பாராட்டுவது எங்ஙனம்?

மாநாட்டின் சிறப்பான அம்சங்கள்:

மாநாட்டின் சிறப்புக்கு மூன்று முக்கிய காரணங்களைச் சொல்ல வேண்டும், (1) சமூகத் தலைவர்கள் சமூகத்திடம் காட்டிய அன்பு; மிகுந்த சிரத்தை, பூரண ஒத்துழைப்பு ஆகும். டாக்டர் ராஜாசர். முத்தையா செட்டியார் அவர்கள், கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள், அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் ஆகியோருக்கு எவ்வளவு வேலைகள் இருக்கின்றன என்பதும், ஒவ்வொரு விநாடியும் பொன்னே போல் போற்றப் பெறுகின்றன என்பதும் நமக்குத் தெரியும். தங்கள் சொந்தக் குடும்ப சுப காரியங்களுக்குக் கூடக் காலமில்லை என்று ஒத்திப்போடும் நிர்பந்தத்திற்கு உட்படும் இத் தலைவர்கள், இரண்டு முழு நாட்களும் தங்களது வேலைகளை ஒத்திப் போட்டு, அல்ல, மறந்து, நம்முடனேயே இருந்து நம்முடைய எல்லா நடவடிக்கைகளிலும் கலந்து, அவற்றைப் பூரணமாக்கி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தலைவர்கள் கிடைக்கப் பெற்ற நாமல்லவா பாக்கியசாலிகள்! மாநாடு அன்று காலை 10 மணி முதல் மாலை 8 மணி வரை சுமார் 10 மணி நேரத்திற்கு மேல் சோபாக்கள், நாற்காலிகள் ஏதுமின்றி ஜமக்காளத்திலேயே நம்முடன் அமர்ந்துஇருந்த மூதறிஞர்களைப் பாராட்டிப் புகழவார்த்தைகள் நமக்குக் கிடைக்க வில்லை. தலைமை வகித்த ராஜாசர். அவர்கள் அமர்ந்திருந்தவாறே பேச மைக் அமைத்திருந்தும், அதைப் பயன்படுத்தாது ஒவ்வொரு அறிவிப்பிற்கும் எழுந்து எழுந்து சுமார் 40 முறைக்கு மேல் எழுந்தமர்ந்த, சஷ்டியப்த பூர்த்தியை நெருங்கிக் கொண்டிருப்பவரின் இளமை உணர்ச்சியை என்னவென்று புகழ்வது? நகரத்தார் பெரு மக்களை ஒரு சேரக் கண்ட உற்சாகமும், சமுதாயத்திடம் அவர்களுக்கு உள்ள பாசமும் தவிர வேறென்ன காரணமாக இருக்க முடியும்? மாநாட்டின் அமைப்பைக் கண்டவுடன் இதற்கு ஏராளமான செலவு ஆகியிருக்குமே, மிகவும் சிறப்பாக நடக்க வேண்டுமே என்று கூறித் தானுகவே யாரும் கேட்காமல் ரூ. 1001/- நன்கொடை அளித்த வள்ளன்மையை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

சென்னை சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்களிடம் மாநாடு பற்றித் தெரிவித்தபோது, அவர்களாகவே மனமுவந்து தம்முடைய ராஜேஸ்வரி மண்டபத்தில் மாநாடு நடத்தலாமென்றும் அதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் தாம் செய்வதாகவும் கூறி, அது போல் எல்லா உதவிகளும் செய்தார்கள். மாநாட்டின் சிறப்புக்கு அம் மண்டபத்தில் நடந்ததும் ஒரு காரணமாகும். மண்டபத்தின் வாடகை, "கரண்ட் சார்ஜ்" எல்லாவற்றையும் தாமே ஏற்றுக் கொண்ட அவர்களின் பெருந்தன்மை மிகவும் போற்றப்படத் தக்க

தாகும். சி. வி. சி. டி. வெங்கிடாசலம் செட்டியார் அவர்களும் இரண்டு நாளும் மகாநாட்டின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கலந்து கொண்டு, குறிப்பாகப் பொதுநலக் கழகம் அமைப்பதில் பெரும் பங்கெடுத்து, பணமும் வசூல் பண்ணி, எதிர்காலத் தேவைக் கும் இது போல் பாடுபட்டுப் பணம் தேடித் தருவதாக வாக்களித் திருக்கிறார்கள். மாநாட்டின் வெற்றிக்கும் ஒரு கேந்திரமாக அமைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது.

(2) இரண்டாவது காரணம் விஷயாலோசனைக் கூட்டத்திலும் மாநாட்டிலும் கலந்து கொண்ட பிரதிநிதித்துவம் வாய்ந்த பிரதிநிதி களாகும். மாநாட்டுக்குப் பல மாதங்களுக்கு முன்பிருந்தே செட்டி மார் நாட்டிலுள்ள எல்லா ஊர்களுக்கும், நகரத்தார்கள் தொழில் புரியும் இந்தியாவிலுள்ள ஏனைய நகரங்களுக்கும், வெளிநாடுகளுக் கும் அவ்வப்போது அறிக்கைகள் செய்திகள் அனுப்பப்பெற்றுவந்தது. முக்கியமாகக் கோவை, மதுரை, திருச்சி சங்கங்களின் பிரதிநிதிகள் செட்டி நாட்டிலுள்ள எல்லா ஊர்களுக்கும் சென்று, ஆங்காங்குள்ள நகரத்தார்களைக் கண்டு பேசி, இம் மாநாட்டிற்குத் தகுந்த பிரதிநிதி களை அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். மாநாட்டின் வெற்றிக்கு இம் முயற்சி பெரிதும் உதவிகரமாக அமைந்தது. வந்திருந்த பிரதிநிதி கள் அனைவரும் மிக உற்சாகத்தோடும், பொறுப்புடனும் எல்லா நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டு மகாநாட்டைச் சிறப்புடன் வெற்றி பெறச் செய்தார்கள்.

(3) மூன்றாவதாக மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் சோம சுந்தரம் செட்டியார் அவர்களையும், அவர்களைச் சார்ந்துள்ள இளைஞர் கூட்டத்தையும் குறிப்பிட வேண்டும். இளைஞர்களிடத்திலும், பெரி யோர்களிடத்திலும், வாஞ்சையுடன் பழகி யாராரிடத்து எந்தெந்த வேலைகளை எவ்வெப்போது பெற்றுக்கொள்ள வேண்டுமோ, அவ்வப் போது அந்தந்த வேலைகளை அவர்களிடம் பெற்றுக் கொள்ளும் திறமை வாய்ந்தவர்கள் தலைவர் சோமசுந்தரம்செட்டியார் அவர்கள். யாருக்கும் மனம் நோகாமல், எந்தப் பெரிய குறைகளையும் நகைச் சுவையோடு எடுத்துக் காட்டித் திருத்தி விடும் சுபாவம் மிகுந்தவர் கள். அவர்களைச் சுற்றி ஆர்வமும் உற்சாகமும் மிகுந்த இளைஞர்கள் எப்போது மிருக்கிறார்கள். அந்த இளைஞர் திருக் கூட்டம்தான் மாநாட்டின் பல வேலைகளை அவ்வப்போது கவனித்துக் குறையேது மின்றி முடித்தார்கள். ''தோள் கண்டார் தோளே கண்டார்'' என்பது போல ஒவ்வொருவரும் தத்தமக்கு இட்ட வேலைகளிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து அந்தந்த வேலைகளைச் செவ்வனே செய்து முடித்தார்கள். சாப்பாட்டு விசாரணையைக் கவனித்த திரு மெ. சிதம்பரம் செட்டியார், ராம. பழனியப்ப செட்டியார். முதலி

யவர்கள் இரண்டு நாளும் சமையல், பந்தி விசாரணை முதலிய வேலைகளில் மிக அக்கரையோடு இராப் பகலாக வேலைபார்த்து, சிறப்பாகவும், சிக்கனமாகவும், வந்திருந்த அனைவரும் மிகவும் திருப்தியோடு பாராட்டுகின்ற அளவுக்கு அறுசுவை உண்டி அளித்தமை குறிப்பிடத் தக்கது.

கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த கலைக்குழு அமைப்பாளர் திரு அழகப்பனும் அவரைச் சார்ந்தவர்களும், கலை நிகழ்ச்சியை மிகவும் வெற்றியுடன் நடத்தி முடித்தார்கள். ரங்கூன் நகர விடுதி நிர்வாகி திரு முருகப்ப செட்டியாரும் அவரைச் சார்ந்தவர்களும் வெளியூர் பிரதிநிதிகளை வரவேற்று, தங்கச் செய்து, அவர்கட்கு வேண்டிய எல்லாம் அளித்துப் பிரதிநிதிகளை திருப்தியாகக் கவனித்துக் கொண்டார்கள். போக்குவரத்துக்கான கார், வேன், பஸ் முதலிய வாகனங்களைக் கண்காணித்து நல்ல முறையில் தேவைக்குப் பயன் படுத்தும் வேலைகளை RM. சோமசுந்தரம் கவனித்துக் கொண்டார் கள். ஹால், மேடை அலங்காரம் வாலண்டியர்கள் சேவைகளை S. P. சண்முகம் அவர்கள் திறம்படக் கவனித்துக் கொண்டார்கள்.

அடக்கமும் சுறுசுறுப்பும் மிகுந்த செயலாளர்களான திரு. கும. முருகப்பனும், திரு. A. M. லெட்சுமணனும் எல்லாக் காரியங்களையும் மேற்பார்த்து, ஆபீஸ் வேலை முதல் அடுக்களை வேலை வரை அத்தனையிலும் கவனம் செலுத்தி வேலைகளை ஒரு நிறைவு பெறச் செய்தார்கள். அடக்கமே உருவான அவ்விரு இளைஞர்களும் சங்கத்தின் உப-தலைவரான திரு. S. RM. PL. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் மாநாட்டுக்கு கார் கொடுத்து உதவி, விளம்பரங்கள் சேகரிப்பதிலும் உதவியாய் இருந்தார்கள். மேலும் திரு. SP. வயிரவன் செட்டியார், தேவகோட்டை உ. மு. சுப. லெ. அழகப்ப செட்டியார் மாநாட்டு நடவடிக்கைகளிலும், சங்க நடவடிக்கைகளிலும் அதிக அக்கரை காட்டி வர வர அதிக உற்சாகத்தோடு சங்க வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். சங்க நிதிக் குழுவின் முக்கியஸ்தரான அவர்கள் சங்கத்திற்கு நிதித் தட்டுப்பாடு வராமல் பார்த்துக் கொள்கிறுர்கள்.

மேலே குறிப்பிட்ட இளைஞர்கள் யாவரும் புகழுக்கோ, பெருமைக்கோ, போட்டோவுக்கோ, மாலைக்கோ ஆசைப்படாமல் கருமமே கண்ணாக இருந்து மாநாட்டை வெற்றி பெறச் செய்திருக்கிறுர்கள். இப்படிப்பட்ட இளைஞர் படை அமைந்ததில் தான் மாநாட்டின் வெற்றியின் ரகசியம் அமைந்திருக்கிறது.

மேற்குறித்த மூன்று சிறப்பு அம்சங்களும் மாநாட்டு வெற்றிக்கு மட்டுமின்றி, நகரத்தார் எதிர்கால நல்வாழ்வுக்கு அடிகோலும் சிறப்பு அம்சங்களுமாகும் என்று கூறி, இந் நல்லியல்புகளை இணைத்து வைத்த எம் பெருமானின் பெருந்தகைமைக்கு வணக்கம் செலுத்துவோமாக.

தீர்மானங்கள்

தீர்மானம்—1

முன் மொழிந்தவர் : **திரு. ந. அருணசலம் செட்டியார், எம். பி.**
வழி மொழிந்தவர் : **திரு. கண. இராமநாதன் செட்டியார்.**

இந்திய மக்களின் நல் வாழ்விற்காகவும், நாட்டின் பாதுகாப்பிற்காகவும் இந்திய அரசாங்கம் செய்து வரும் முயற்சிகளுக்கு முழு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று நம் சமூகத்தினரை இம் மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

தீர்மானம்—2

முன் மொழிந்தவர் : **திரு. கருமுத்து தியாகராசன் செட்டியார்.**
வழி மொழிந்தவர் : **திரு. க. வெ. சித. வெங்கடாசலம் செட்டியார்.**

நகரத்தார் பொதுநலக் கழகம்ஒன்று அமைப்பதென இம்மாநாடு தீர்மானிக்கிறது. கல்வி வளர்ச்சி, கல்வியின் தரம் உயர்வு, திருமண உதவி, வேலே வாய்ப்புத் தேடிக் கொடுத்தல், மருத்துவ உதவி போன்றவை செய்தல் ஆகியவை இக்கழகத்தின் நோக்கங்களில் சில ஆகும். இக் கழகத்திற்குக் கூடுமானவரை செட்டிநாட்டில் வசிக்கும் எல்லா ஊர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையிலும் செட்டிநாடு அல்லாத பிற ஊர்களில் இயங்கும் பதிவு பெற்ற நகரத்தார் சங்கங்களுக்குத் தக்க முறையில் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையிலும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறது.

மேற்கண்ட உறுப்பினர்கள் கூடித் தங்களுக்குள் 21 பேர்கள் கொண்ட நிர்வாகக் குழு அமைத்து நிர்வகிக்க வேண்டுகிறது.

உறுப்பினர்கள் கட்டணத்தின் மூலமாகவும் நன்கொடை மூலமாகவும் நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பொது நன்மைக்கு என வழங்கப்பட்டும் இப்பொழுது பயன்படுத்தப்படாமலும் தேவைக்கு மேல் இருக்கும் சொத்துக்களையும், பணங்களையும் கணக்கெடுத்து, பெற வழி செய்வது மூலமாகவும் நிதி திரட்டுவது என இம்மாநாடு தீர்மானிக்கிறது. (இதில் செட்டி நாட்டில் உள்ள நகரத்தார் கோவில்கள் அது சம்பந்தப்பட்ட நகர விடுதிகள், மடங்கள், தனிப் பட்ட தர்ம ஸ்தாபனங்கள், டிரஸ்டுகள் உட்பட்டவையல்ல.)

மேற்கண்டவாறு நிதி திரட்டி நகரத்தார் பொது நலக் கழகத்தை (Nagarathar Welfare Society) அமைத்துப் பதிவு

